**அம்பன்கங்க கோரளை பிரதேச சபை - 2023**

------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பன்கங்க கோரளை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அம்பன்கங்க கோரளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான

கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | | - | |
| (அ) | ரைதலாவ முதல் இம்புல்கொல்ல வரை பிலப்பட்டிய கமநல வீதி அபிவிருத்தி திட்டத்திற்காக செலுத்த வேண்டிய ரூபா 4,990,000 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 499,000 என பதிவுசெய்யப்பட்டதால் கடன்கொடுத்தோர் ரூபா 4,491,000 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | 2024 இன் இறுதிக் கணக்கில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு தயாரிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 2 ருமான மீதிகள் மற்றும் 10 அலகுகளின் களஞ்சிய பேரேட்டின் பிரகாரம் மீதி அட்டவணையுடன் ஒப்பிடும் போது ரூபா 122,072 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2. கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 3,854,123 ஆன 3 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 516,002 ஆன 13 பொறுப்பு விடயங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேடு, மற்றும் பொறுப்புகளுக்கான பதிவேடுகள் சமர்ப்பிக்கப் படாமையால் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கணக்கு மீதிகளுக்குரிய சரியான பதிவேடுகளை இனங்காண்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக | ஒவ்வொரு மீதிகளையும் உறுதிப்படுத்துவதற் காக ஆவணங்கள், கோவைகள் பேணிச் செல்லப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (i) 24 ஆம் பிரிவு | சபையால் பேணிச் செல்லப்படுகின்ற வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பெயர் பதிவேடொன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த போதும் திட்ட வரைபடம் தயாரித்து எல்லைகள் குறித்து முறைப்படி அச்செயற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் | இனங்காணப்பட்ட வீதிகளை பிரதேச செயலாளர் மூலம் மாத்தளை நிலஅளவையாளர் அலுவலகத்திற்கு அளவீட்டு நடவடிக்கைகள் மேற் கொள்வதற்காக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகாரம் கிடைத்திருந்த 9 வீதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே வீதி பதிவேடு நாளதுவரையாக பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | |
| (ii) | 127 ஆம் பிரிவு | சபை பயன்படுத்தும் 14 மயானங்களின் எல்லைகளை குறித்த உரித்தினை கையேற்று ஏடுகளுக்கு உட்படுத்தியிருக்கவில்லை. | அளவீட்டு கட்டளை வேண்டுகோளுக்காக ஆரம்ப நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) | | | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (i) | விதி 59 | அதிகார பிரதேசத்தில் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிறுவனங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொண்டு பட்டியலொன்று மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 60 ஆம் விதியில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு பட்டியலொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | |
| (ii) | விதி 61 | பீ.எஸ் 26 படிவத்தின் பிரகாரம் தயாரிக்க வேண்டிய கைத்தொழில்கள் / வியாபார வரி தொடர்பாக பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பீ எஸ் 26 படிவத்தின் பிரகாரம் பதிவேடொன்று எதிர்காலத்தில் தயாரிப்பதாக | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 244,365 ஆக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 150,398 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப் பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா | மதிப்பிடப்ப ட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப் பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட் ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 182,500 | 7,977 | 5,092 | 11,591 | 147,500 | 7,914 | 7,139 | 8,706 |
| (ii) | வாடகை | 464,400 | 271,260 | 241,970 | 59,225 | 357,400 | 245,320 | 255,529 | 29,935 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங் கள் | 250,000 | 297,000 | 297,000 | - | 245,100 | 293,900 | 293,900 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 1,400,000 | 2,427,155 | 2,270,244 | 965,594 | 1,400,000 | 1,626,705 | 1,502,976 | 808,683 |
| | மொத்தம் | 2,296,900 | 3,003,392 | 2,814,306 | 1,036,410 | 2,150,000 | 2,173,839 | 2,059,944 | 847,324 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 <u>சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்</u>

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் சனவரி 11 ஆந் திகதிய CPC/RDHS/MT/MOH/ AMB/FS/01/2023 ஆம் இலக்க சுகாதார வைத்திய உத்தியோகத்தரின் கடிதத்தின் பிரகாரம் சபை அதிகாரப் பிரசேத்தில் காணப்படும் 8 நீர் முன்மொழிவு திட்டங்களில் சுத்திகரிக்கப்படாமல் குடிநீர் வழங்கப்படுவதாகவும் பிரதேச மக்கள் பாதுகாப்பற்ற நீரைப் பயன்படுத்துவதால் அநேகமான நோய்களுக்கு தொற்றுவது அவதானிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் இது தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது குளோரின் இடல் இடப்படாதிருந்ததுடன் வழங்கப்படும் நீருக்கு குளோரீன் இடும் செயற்பாட்டிற்கு உட்படுத்த தேவையான நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக | சபை பொதுச் சுகாதாரம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆதன கடன் வட்டி மீளளிப்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் பெற வேண்டிய 04 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 4,702,059 ஆக இருந்ததுடன் 01 ஆண்டிற்கு மேற்பட்ட 5 ஆண்டுகளுக்கு குறைந்த மீதி ரூபா 485,749 ஆகவும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 2,914,879 ஆக இருந்தது. | திட்ட மற்றும் ஏனைய நானாவித கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாகவும் | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதி திகதியில் செலுத்த வேண்டிய 2 கணக்கு மீதிகளின் மொத்தம் 2,976,872 ஆக இருந்ததுடன் அதில் தீர்வு செய்யப்படாமல் காணப்படும் காலம் 1 ஆண்டிற்கும் 5 இற்கும் | பணத்தை எதிர்காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |

| | | | |
|---|---|---|---|
| | இடைப்பட்ட மீதி ரூபா 522,004 தொகையும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 1,420,168 ஆக இருந்தது. | | |
| (இ) | கடந்த 4 ஆண்டுகளுக்குள் கிடைத்திருந்த 104 கட்டிட அபிவிருத்தி அனுமதிபத்திரங் களில் 30 விண்ணப்பங் களுக்காக கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதில் 2 கட்டிடங்களுக்காக இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்க வில்லை. 2020 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு காலப்பகுதி வரை அங்கீகரிக்கப்படாத 68 விண்ணப்பங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்து தேவையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | இணக்கச் சான்றிதழ்களை வழங்குவதற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தரால் புலனாய்வு மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெளிக்கள பரிசோதனையொ ன்று மேற்கொண்டு இணக்கச் சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சபைக்குரிய ரூபா 7,001,102 ஆன வாகனங்கள் இயந்திர உபகரணங்கள் மற்றும் 4 உபகரணங்கள் 3½ ஆண்டுகள் முதல் 16 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் விளைவற்று அல்லது குறைப் பயன்பாட்டில் காணப்படுவதாகவும் நீர் பௌசர் ஓட்டத்திலிருந்து அகற்றி 18 ஆண்டுகளுக்கு 8 ஆண்டுகளுக்கு இடையே நீண்டகாலம் கடந்திருந்த போதும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வில்லையென அவதானிக்கப்பட்டன. | ஒவ்வொரு சொத்துக்கள் தொடர்பாகவும் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதாக | திருத்தம் செய்து பயன்பாட்டுக்கு எடுப்பதற்கும் கைதவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்தும் ரூபா 533,750 பெறுமதியான 70 காணிகள் மற்றும் ரூபா 1,784,050 பெறுமதியான 03 வாகனங்களின் உரித்து கையேற்கப்பட்டு இருக்கவில்லை. | கையேற்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | உரித்தினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 3,128,891 செலவு செய்து பரகஹமட கடைகளை நிர்மாணிக்கும் திட்டத்தில் செய்யப்பட்ட கேள்விதாரர் ஆரம்ப செலவினம் (Preliminaries) இற்காக விலை விபரங்கள் சமர்ப்பிக்கப்படா திருக்கையில் இறுதி பட்டியலில் ஆரம்ப செலவினத்திற்காக ரூபா 20,438 தொகை உள்ளடக்கி பரிந்துரைத்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தில் சுற்றுக்கம்பி உள்ளடக்கிய அளவினை விட 128 கிலோ கிராம் இற்காக ரூபா 51,360 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் திட்டத்திற்கு வெளியே Tie Beam Main Beam இற்காக கொங்கரீட் 0.728 $m^3$ இற்காக ரூபா 18,107 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சிமன்ற பொறியியலாளரின் பரிந்துரையின் பேரில் கம்பி கட்டுதல் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் இது தொடர்பாக கட்டிடத்தை மீண்டும் பரீட்சித்து மீண்டும் பரீட்சித்து அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொண்ட பின்னர் விரைவில் பதிலொன்று வழங்கப்பட்டுள்ளதாக | மதிப்பீட்டின் பிரகாரம் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட் டுள்ளதா என உறுதிப்படுத்தி கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியுடன் ஒப்பிடும் போது 07 பதவிகளில் 10 வெற்றிடங்களும் ஒரு பதவியில் மிகையொன்றும் காணப்பட்டன. | மிகவும் சிரமத்தில் நிறுவனம் நடவடிக்கைகள் பேணிச் செல்வதாக | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை பேணிச் செல்லல் வேண்டும். |

: